செ.வெ.எண்: 05 நாள்: 03.01.2018

**குடுமியான்மலை அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மரக்கன்றுகள், மூலிகை செடிகளை வாங்கி பயன்பெற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அரசு தோட்டக்கலைப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் (02.01.2018) அன்று நேரில் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் அனுப்புவதற்காக 6.25 இலட்சம் எண்ணிக்கையில் கத்தரி, வெண்டை, மிளகாய், பாகல் உள்ளிட்ட காய்கறி விதைகள் அடங்கிய பொட்டலங்கள் காற்றுப்போகாத வகையில் இயந்திரங்கள் மூலம் தயார் செய்யும் பணியினை பார்வையிட்டார். தொடர்ந்து நிழல்வலைக் கூடத்தில் சின்ன வெங்காயம் நாற்றுகள் குழித்தட்டு முறையில் இலட்சக் கணக்கில் தயார் செய்யும் பணியினை பார்வையிட்டு இந்த பணிகள் சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டுவருவதை கேட்டறிந்தார். பின்னர் நிழல்வலைக் கூடங்களில் மிளகாய், சென்டிப்பூ ஆகியவை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யபட்டுள்ளதை பார்வையிட்டார்.

மேலும் மா,கொய்யா மரங்களை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் இங்கு பயிரிடப்பட்டுள்ள மா, கொய்யா இரகங்கள் குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். பண்ணையிலுள்ள பணியாளர்கள் மா மரக்கன்றுகளில் சுவையான மா வகைகளை உருவாக்கும் வகையில் ஒட்டுக்கன்றுகளை தயார் செய்யும் பணிகளை பார்வையிட்டு இந்தப் பணிகள் குறித்து முழுமையான விவரங்களை கேட்டறிந்தார். இந்த ஒட்டுக்கன்றுகள் பனிவலை கூடங்களில் பதப்படுத்தி உருவாகும் பணியையும் பார்வையிட்டார்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் செடிகளின் தரம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை, மகசூல் விபரம், உற்பத்தி விலை உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் வேளாண் அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

குடுமியான்மலை அரசு தோட்டக்கலைத்துறை பண்ணை 118.68 ஹெக்டர் பரப்பளவில் செயல்பட்டு வருகின்றது. மொத்த பரப்பளவில் நீலம், பெங்களூரா, அல்பான்சோ, மல்கோவா, செந்தூரா, சேலம், ருமானி உள்ளிட்ட மா வகை மரங்கள் 56.59 ஹெக்டரிலும், பி.கெ.எம்-1, ஓவல், கிரிக்கெட்பால் உள்ளிட்ட சப்போட்டா வகை மரங்கள் 9.23 ஹெக்டரிலும், கிருஷ்ணா, எண்.எ.7 உள்ளிட்ட நெல்லிக்காய் வகை மரங்கள் 7.50 ஹெக்டரிலும், பி.கெ.எம் 1, உரிகம் உள்ளிட்ட புளி வகை மரங்கள் 2.42 ஹெக்டரிலும் என பல வகையான மரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடுமியான்மலை அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 1 தொழிலாளர் அறையும், 2 கிடங்கும், 1 விதை சேமிப்பு அறையும், 11 எண்ணிக்கையில் நீர் மூழ்கி பம்புகளும், 2 டிராக்டர், 3 பவர் டில்லர், 2 விசை தெளிப்பான், 2 மோட்டார் பொருத்திய களை எடுக்கும் கருவி, 4 அஸ்பி தெளிப்பான்களும், 1 மின்கலம் மூலம் இயங்கும் தெளிப்பானும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இங்கு தோட்டக்கலை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர், நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். குடுமியான்மலை அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மரக்கன்றுகள், மூலிகை செடிகளை வாங்கி பயன்பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலைய இயக்குநர் திரு.ப.சங்கரலிங்கம், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.ராஜகோபால், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு.அருணாச்சலம், வேளாண்மை அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**